ISSN: 3139-2571 | Min E Kavi International Journal of Multidisciplinary Research (MIJMR) |
Volume 1, Issue 1, SEPTEMBER 2026

புகலிட தமிழ்க் கவிதைகளில் வெளிப்படும் அந்நியமாதல் கோட்பாடு

திரு. தியாகு முகிலன், தமிழ் கற்கைகள் துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

கையடக்கத்தொலைபேசி 94757500948

மின்னஞ்சல் : prakashmukilan080@gmail.come

அறிமுகமும்

ஈழத்துத் தமிழ் இலக்கியச் செல்நெறியின் மிக முக்கியமான வரலாற்றுத் திருப்புமுனையாகப் புகலிடத் தமிழ் இலக்கியத்தின் தோற்றம் அமைகிறது. இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இலங்கையில் தீவிரமடைந்த இன முரண்பாடுகள், அரசு ரீதியான அடக்குமுறைகள், 1981-இல் நிகழ்த்தப்பட்ட யாழ்ப்பாணப் பொது நூலக எரிப்பு, 1983-ஆம் ஆண்டின் கறுப்பு ஜூலை இனக்கலவரம் மற்றும் அதனைத் தொடர்ந்து வெடித்த கொடூரமான உள்நாட்டுப் போர் ஆகியவை பெருந்திரளான தமிழர்களைத் தங்களின் பூர்வீக நிலத்திலிருந்து வெளியேற நிர்ப்பந்தித்தன. இவ்வாறு போரினாலும் உயிராபத்தினாலும் உந்தப்பட்டு ஐரோப்பிய நாடுகள், கனடா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட மேலைத்தேய அகதிகளாகவும் புலம்பெயர்ந்தோராகவும் தஞ்சமடைந்த தமிழர்கள், தங்களின் சமூக, பண்பாட்டு மற்றும் புவியியல் வேர்களிலிருந்து துண்டிக்கப்பட்டனர்.

இத்தகைய வரலாற்றுப் பேரதிர்ச்சி, தமிழ் இலக்கியப் பரப்பில் ஒரு புதிய அழகியலையும் பொருண்மையையும் உருவாக்கியது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மஹாகவி, இ. முருகையன், நீலாவாணன் போன்ற முன்னோடி ஈழத்துக் கவிஞர்களால் வளர்த்தெடுக்கப்பட்ட இலக்கியப் பாரம்பரியம், பிராந்தியச் சிக்கல்கள், சாதியப் பிளவுகள், கோயில் நுழைவுப் போராட்டங்கள் மற்றும் வர்க்க முரண்பாடுகளை மையமாகக் கொண்டு இயங்கியது. உதாரணத்திற்கு, சமூகத்தில் நிலவிய தீண்டாமைக் கொடுமையை எதிர்த்து மஹாகவி பின்வருமாறு எழுதினார்."ஊரெல்லாம் கூடி ஒரு தேர் இழுக்கிறதே வாருங்கள் நாமும்போய் பிடிப்போம்வடத்தை" ஆனால், போர்க்கால இடப்பெயர்வும் அதனைத் தொடர்ந்த

புலம்பெயர்வும் கவிதையின் பேசுபொருளைத் தாய்நில எல்லைகளைத் தாண்டி உலகளாவிய அகதித்துவ அனுபவமாகவும் இருத்தலியல் போராட்டமாகவும் மாற்றின. இப்புதிய புலம்பெயர் சூழலில் உருவான கவிதைகளின் அடிநாதமாகத் திகழ்வது “அந்நியமாதல்” (Alienation) என்னும் தீவிர உளவியல் மற்றும் தத்துவார்த்தக் கோட்பாடாகும்.

திறவுச் சொற்கள் - அந்நியமாதல், புகலிடக் கவிதைகள், அகதி நிலை, போர்க்கால சூழல்

அந்நியமாதல் கோட்பாடு

அந்நியமாதல் என்பது தத்துவவியல், சமூகவியல் மற்றும் உளவியல் தளங்களில் பரவலாக விவாதிக்கப்படும் ஒரு கருத்தாக்கமாகும். தொழிற்புரட்சி மற்றும் முதலாளித்துவ அமைப்பின் வளர்ச்சியால் மனிதன் தனது உழைப்பின் பயன்களிலிருந்தும், இயற்கைச் சூழலிலிருந்தும், சக மனிதர்களிடமிருந்தும், இறுதியாகத் தன்னிடமிருந்தும் விலகித் தனிமைப்படும் நிலையைக் குறிக்கவே இக்கோட்பாடு முதன்முதலில் பயன்படுத்தப்பட்டது. சமூகவியல் தத்துவத்தில், தனிமனிதன் தான் வாழும் சமூக அமைப்போடு தன்னை அடையாளப்படுத்திக் கொள்ள முடியாமல் போகும்போது ஏற்படும் வெற்றிடமும், அர்த்தமின்மையும் அந்நியமாதலின் முதன்மைப் பண்புகளாகக் கருதப்படுகின்றன. புகலிடத் தமிழர்களின் கவிதை வெளியில் இக்கோட்பாடு பல பரிமாணங்களில் தொழிற்படுகிறது. அகதியாகப் புகலிடம் புகுந்து புதிய நாடுகளில் வேரூன்ற முயலும் போது, புதிய நாட்டின் காலநிலை, மொழி, பண்பாடு, சட்டதிட்டங்கள் மற்றும் சமூக ஒழுங்கமைப்பு ஆகியவற்றுடன் அவர்கள் நடத்த வேண்டியுள்ள போராட்டம் புறவய அந்நியமாதலைத் தோற்றுவிக்கிறது. அதேவேளையில், சிதைந்துபோன தாய்நில நினைவுகளுக்கும், மீள முடியாத புகலிட யதார்த்தத்திற்கும் இடையில் அகப்பட்டுத் தவிக்கும் மனநிலை அகவய அந்நியமாதலாக உருவெடுக்கிறது. கசப்பான வாழ்க்கைச் சூழலுக்கு ஆட்பட்டு, தன்னால் உருவாக்கப்பட்ட உலகிலிருந்தும், தன்னுடைய சுய அடையாளத்திலிருந்தும் மனிதன் விலகி நிற்கும் இந்த உளவியல் நசுக்கம், புகலிடத் தமிழ்க் கவிதைகளின் முதன்மைப் பொருண்மையாக மாறியுள்ளது.

தாய்நில இழப்பும் போர்க்கால வடுக்களும் அகதித்துவத்தின் முதன்மை நிலை

புகலிடக் கவிதைகளில் வெளிப்படும் அந்நியமாதல் உணர்வு திடீரெனத் தோன்றுவது அன்று மாறாக, அது தாய்நிலத்தில் அனுபவித்த வன்முறை, பேரழிவு மற்றும் தாய்மண்ணை விட்டுப் பிரியும் துயரத்திலிருந்தே தொடங்குகிறது. போரினால் சொந்த நிலத்திலிருந்து பிடுங்கி எறியப்படும் ஒரு மனிதன், தனது வரலாற்றுத் தொடர்ச்சியையும் அடையாளத்தையும் இழந்து முதன்முதலாக அந்நியனாகிறான்.

ஈழத்து நவீன கவிஞரான சேரனின் "இரண்டாவது சூரிய உதயம்" என்னும் கவிதைத் தொகுதி, தாய்நிலத்தின் பண்பாட்டுச் சின்னங்கள் எரிக்கப்பட்டுச் சாம்பலாக்கப்பட்ட போது எழும்பிய அதிர்ச்சியையும், வன்முறையின் கொடூரத்தையும் பதிவு செய்கிறது. யாழ்ப்பாணப் பொது நூலக எரிப்பை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட இக்கவிதைகளில், வன்முறைக்கு ஆளான மனிதர்கள் மீண்டும் எழும் அழைப்பைச் சேரன் பின்வருமாறு பதிவு செய்கிறார். எடுத்துக்காட்டு

"எங்கள்
வீடுகள் எரிக்கப்பட்டுவிட்டன
நிலங்கள் பறிக்கப்பட்டுவிட்டன
தெருக்கள் குருதியால்
நனைக்கப்பட்டுவிட்டன.
ஆயினும்...
சாம்பல் மேடுகளிலிருந்து
நாங்கள் மீண்டும் எழுவோம்.
இரவின் இருளைக் கிழித்துக்கொண்டு
எங்களின் நம்பிக்கையால்
இன்னுமொரு சூரியனை
உதிக்க வைப்போம்."

போரின் வடுவையும் இழப்பையும் எதிர்கொள்ளும் மனிதனை நோக்கிச் சேரன் கேட்கும் வினாவும், போராட்ட உணர்வும் பின்வரும் வரிகளில் மிளிர்கின்றன.

“அப்பா என அலறித் துடிக்கிற
மழலைக்கு என்னதான் சொல்வாய்?
கொடுமைகள் அழியப் போரிடச் சொல்”

மேலும், “மயானகாண்டம்” கவிதையில் தாய்நிலத்தின் பேரழிவையும் இயற்கை மீண்டும் உயிர்ப்பெறும் அவல முரணையும் பின்வருமாறு பதிவு செய்கிறார். “துயர் சூழ்ந்து ரத்த சிந்திய நிலங்களின்மீது நெல்விளைகிறது சணல் பூக்கிறது மழை பெய்கிறது” இதேபோன்று, கவிஞர் சு. வில்வரத்தினத்தின் கவிதைகள் தாய்நிலப் பிரிவின் துயரத்தையும், வேர்களிலிருந்து பிரிக்கப்பட்ட சூழலையும் ஆழமாகப் பேசுகின்றன. “வேற்றாகி நின்ற வெளி” என்ற கவிதையில், அன்னியரின் வருகையினாலும் போரின் வெறியாட்டத்தினாலும் மனிதர்கள் தங்களின் வேர்கொண்ட வாழ்விடங்களை விட்டு ஓடவேண்டிய அவலத்தைச் சாட்சியப்படுத்துகிறார். எடுத்துக்காட்டு,

“வெளியாரின் வருகையோடு வேர்கொண்ட
வாழ்வையும் பிடுங்கிக் கொண்டு…
கதவுகளை சாத்தியும் திறந்தும்
தள்ளியும் உள்ளோடியோடி எதையெதையோ
முயன்று உறவின்மை கண்டபின்
தோற்றோடி வேற்றாகி நின்ற
வெளியிடைத் தோய்கிறது.
வெளிகொண்ட காற்று வெளிகொண்ட
நிலா வெளியை வெறிக்கின்ற சூரியன்.”

வீட்டின் முற்றத்தில் வீசிய காற்று, முற்றத்துச் சூரியன், முற்றத்து நிலா எனத் தங்களின் அன்றாட வாழ்வோடு பிணைந்திருந்த அனைத்து இயல்பான அனுபவங்களும் விடைபெற்றுச் செல்வதை வில்வரத்தினம் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

“முற்றத்துச் சூரியன் முற்றத்து நிலா முற்றத்துக் காற்றென வீட்டு முற்றங்களுக்கே உரித்தான வாழ்வனுபவங்கள் விடைபெற்றுக்கொண்டன” கவிஞர் சோலைக்கிளியின்

வரிகளில், போர்க்காலத் துயரத்தின் அன்றாடத் தன்மை பின்வருமாறு உருவகப்படுத்தப்படுகிறது. மரணங்கள் அன்றாடநிகழ்வாக மாறும் இத்தகைய வன்முறைச் சூழல், மனிதர்களின் உணர்வுகளை மரத்துப் போகச் செய்து, சொந்த மண்ணிலேயே அவர்களை அந்நியப்படுத்துகிறது.

புகலிடச் சூழலும் இருத்தலியல் நசுக்கமும் மொழி, காலநிலை மற்றும் அடையாளச் சிக்கல்கள்

தஞ்சமடைந்த மேலைநாடுகளில் தமிழர்கள் எதிர்கொள்ளும் வாழ்க்கை முறை, தாய்நிலத்தின் அனுபவங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக இருக்கிறது. புகலிட நாட்டின் உறைபனிக் காலநிலை, அந்நிய மொழி, வேறுபட்ட பண்பாட்டு விதிகளுக்கு அமைய வாழ வேண்டிய கட்டாயம் ஆகியவை அகதிகளை மீளாத் தனிமைக்குள் தள்ளுகின்றன. இதனுடன், அகதி அந்தஸ்து பெறுவதில் உள்ள சட்டச் சிக்கல்கள், விசா மறுப்புகள் மற்றும் நிர்வாகக் கெடுபிடிகள் அவர்களின் இருத்தலையே அசைத்துப் பார்க்கின்றன.

வ.ஐ.ச. ஜெயபாலன் தனது கவிதைகளில் புலம்பெயர் மக்களின் அகப் போராட்டங்களையும், புகலிடச் சூழலில் எழும் அந்நியமாதல் உணர்வையும் மிகக் கூர்மையான படிமங்கள் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். “உயிர்த்தெழுந்த நாட்கள்” என்ற நீண்ட கவிதையில் புகலிட வாழ்வின் தனிமையையும் பாதுகாப்பற்ற தன்மையையும் அவர் பின்வருமாறு வெளிப்படுத்துகிறார். எடுத்துக்காட்டு,

“உயிர்த்தெழுந்த நாட்கள்
இருளின் சிறையில் உறைந்த காலம்
இறகுகளை இழந்து நின்ற நேரம்,
வழிகாட்ட வெளிச்சமின்றி வாடிய விழிகளில்
விடியல் ஒருமுறை எட்டிப் பார்த்தது.
மண்ணோடு மட்கியதாக எண்ணிய விதைகள்
மழையின் தொடுதலால் முளைப்பது போல,
உடைந்த இதயத்தின் ஓரங்களில் இருந்து
புதிய நம்பிக்கைகள் உயிர்த்தெழுந்தன.

இழந்தவை எல்லாம் முகவரிகள் அல்ல,
வந்தடையும் புது வழியின் தொடக்கங்களே!
துயரங்கள் கரைந்த அந்த அமைதிப் பொழுதில்
வாழ்க்கை மீண்டும் புன்னகைக்கத் தொடங்கியது.
சுமந்த வலிகள் சிறகுகளாய் மாற,
வானம் நோக்கித் துணிந்து எழுந்தோம்
மறுபடி மலர்ந்த இந்த நாட்களே — நாம்
மண்ணில் பெற்ற உயிர்த்தெழுதல்"

"தப்பியநான் அதிட்டத்தால் வாட்டும் குளிரில்..." போர் என்னும் ஓநாயின் பிடியிலிருந்து தப்பி வந்த போதிலும், புகலிட நாட்டின் வாட்டும் குளிரிலும் தனிமையிலும் அகப்பட்டுத் தவிக்கும் பிம்பம் வழியாக அகதியின் இருத்தலியல் நசுக்கம் சித்தரிக்கப்படுகிறது. அதேவேளையில், "ஈழத்து மண்ணும் எங்கள் முகங்களும்" கவிதையில் தாய்நில மீட்சி மற்றும் இழந்த அமைதிக்கான ஏக்கத்தைப் பின்வருமாறு பதிவு செய்கிறார்.

மீண்டும் எனது மண்மிதித்தேன் மீண்டும்என் பழைய சிறகுகள் விரித்தேன் மீண்டும் எனக்குப் பழகிய காற்று மீண்டும் எனக்குப் பழகிய ஆறு மீண்டும் எனது இழந்த நிம்மதி இதேபோன்று, இளவாலை விஜயேந்திரனின் கவிதைகள் புகலிடச் சட்டங்களால் ஏற்படும் குடும்பப் பிரிவையும் இருத்தலியல் தவிப்பையும் பேசுகின்றன. "கிறான் மரமும் கிளுவை வேலியும்" என்ற கவிதையில், புகலிட நாட்டின் விசா கெடுபிடிகள் மற்றும் பண்பாட்டு முரண்களைப் பின்வருமாறு சாடுகிறார்.

"என் வீட்டின் முன்னாலோ
வேலியென நட்ட கிளுவை
பொன் வண்டு சுமந்து
கோடையிலும் பார்த்திருக்கும்
பிறைநிலவின் கதிர்பட்டும்
பொன்னின் துகள்களென
மின்னித் தெரியும்

கோடையிலும் இறவாத
கிளுவைகளா
குளிரிலும் தலை நிமிரும் கிறான் பரமா?
சிறந்ததென்று கேட்டாயோ
துயரம் சுமந்த மனிதரின்
நினைவுகட்கு சுமையாயிருக்கும்
இயற்கையின் விதிகட்கு
விடையில்லை என்னிடம்"

"என் வீட்டின் முன்னாலோ வேலியென நட்ட கிளுவை." எனக்கு "விசா தந்த அதிகாரி மனைவிக்கு 'விசா' தர மறுக்கிறான்..." சொந்த நாட்டுக்கும் திரும்ப முடியாமல், புகுந்த நாட்டிலும் நிலைகொள்ள முடியாமல் அலையும் அவல நிலையை இக்கவிதை உணர்த்துகிறது.

கவிஞர் திருமாவளவனின் "மனிதர் காட்சிச்சாலை", "பனிவயல் உழவு", "அ.்.தே இரவு அ.்.தே பகல்" ஆகிய தொகுப்புகள், புகலிட நாட்டில் தமிழர்கள் எதிர்கொள்ளும் எந்திரத்தனமான உழைப்பையும், இன ரீதியான ரீதியான ஒதுக்குதலையும் பொருண்மையாகக் கொண்டுள்ளன. முதலாளித்துவப் புகலிடச் சமூகத்தில் மனிதர்கள் வெறும் உழைப்புச் சக்தியாகவும், காட்சிப் பொருளாகவும் மாற்றப்படும் அவலத்தைத் திருமாவளவனின் வரிகள் வெளிப்படுத்துகின்றன.

புகலிடப் பெண் கவிஞர்களும் பன்முக அந்நியமாதலின் பரிமாணங்கள்

புகலிடத் தமிழ்ச் சமூகத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் அந்நியமாதல் என்பது மேலும் பல சிக்கலான பரிமாணங்களைக் கொண்டதாகும். ஆணாதிக்கச் சமூகக் அமைப்பினால் ஏற்படும் அடக்குமுறைகள், போரினால் நேர்ந்த இழப்புகள் மற்றும் புகலிட நாட்டின் புதிய பண்பாட்டுச் சூழலில் ஏற்படும் அடையாளச் சிக்கல்கள் எனப் பன்முக அழுத்தங்களை பெண்கள் சந்திக்கின்றனர். "சொல்லாத சேதிகள்" என்ற கவிதைத் தொகுதி, புகலிடப் பெண்களின் கவிதை வீச்சையும் அவர்களின் ஆழமான அகச் சிக்கல்களையும் வெளிப்படுத்திய மிக முக்கியமான பதிவாகும். மேலைநாடுகளில் நிலவும் பாலினச் சமத்துவக் கருத்துகளின் தாக்கமும், சொந்தச்

சமூகத்தின் பாரம்பரியக் கட்டுப்பாடுகளும் மோதிக்கொள்ளும் எல்லைக்கோட்டில் பெண்கள் தீவிரமான மன உலைச்சலுக்கு ஆளாகின்றனர்.

அடுப்பங்கரைகளிலும் பாரம்பரிய எல்லைகளிலும் முடக்கப்பட்ட பெண்களின் அகக்குமுறல் மற்றும் அந்நியமாதல் உணர்வைப் பின்வரும் கவிதை வரிகள் பதிவு செய்கின்றன.

“சாலையில் நடக்கும்போது
எழும் ஆயிரம் விழிகளின்
பார்வைக் கூர்மைகளுக்கு இடையே,
நான் ஒரு பெண்ணாக மட்டுமே
வகைப்படுத்தப்படுகிறேன்.
என் அடையாளங்கள்,
என் சிந்தனைகள்,
என் கனவுகள் அனைத்தும்
அவர்களின் ஒரு கணப் பார்வையில்
கரந்து போகின்றன.
ஆண்களின் உலகத்தில்
நான் கடந்து செல்லும்
ஒவ்வொரு பாதையிலும்,
என் உடலின் மீதே
அவர்களின் கேள்விகளும்
காமப் பார்வைகளும் பதிகின்றன—
நான் பெண்ணாதலால்!”

புகலிடச் சமூகத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் காமப் பார்வைகளும், பண்டமாக்கப்படும் சூழலும் அவர்களைத் தங்களின் உடலிலிருந்தும் சுயத்திலிருந்தும் அந்நியப்படுத்துகின்றன. பெண்களின் கவிதைகளில் வெளிப்படும் அந்நியமாதல் என்பது வெறும் நில இழப்பு சார்ந்ததாக மட்டுமில்லாமல், ஆணாதிக்கக்

கட்டமைப்புக்கும் புகலிட நுகர்வோர் பண்பாட்டிற்கும் எதிரான குரலாக உருவெடுக்கிறது.

புலம்பெயர்ந்த மக்களின் மனதில் தாய்நிலத்தைப் பற்றிய பிம்பம் என்பது அவர்கள் வெளியேறிய காலத்தில் இருந்த நிலையிலேயே உறைந்துபோய் (குசழணநெ ைவஅந) இருக்கிறது. ஆனால், கால ஓட்டத்தில் தாய்நிலம் சமூக, அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாகப் பெருமளவில் உருமாறிப்போகிறது. இதனால், நீண்ட காலத்திற்குப் பிறகு தாய்நிலத்திற்குத் திரும்ப நினைக்கும் அல்லது திரும்புபவர்கள், தங்களின் கற்பனையிலிருந்த தாய்நிலத்திற்கும் யதார்த்தத்தில் இருக்கும் தாய்நிலத்திற்கும் இடையிலான பிரமாண்டமான இடை வெளியைக் கண்டு பேரதிர்ச்சி அடைகின்றனர். சமூகவியலில் இந்நிலை “கால அதிர்ச்சி” (ீநசழைன ளூழஉம) என்று அழைக்கப்படுகிறது.

தாய்நிலத்தின் அந்நியத் தன்மையிலிருந்து தப்பிக்க புகலிடம் நோக்கி ஓடிய மனிதனுக்கு, புகலிடத்தின் தனிமையிலிருந்து மீள நினைக்கும் போது தாய்நிலமும் அந்நியமாகிப்போகும் இருத்தலியல் முரண் நிகழ்கிறது. இத்தகைய கால அதிர்ச்சியும் தாய்நில அந்நியமாதலும் புகலிடக் கவிதைகளில் ஆழமான இழப்புணர்வாகவும், மீளமுடியாத வெற்றிடமாகவும் வெளிப்படுகின்றன.

முடிவுரை

புகலிடத் தமிழ்க் கவிதைகள், ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு புதிய அழகியலையும், உலகளாவிய தத்துவப் பரிமாணத்தையும் தோற்றுவித்துள்ளன. போரின் வடுக்கள், கட்டாய இடப்பெயர்வு, தாய்நில இழப்பு, அகதி வாழ்வின் அவலங்கள், மேலைத்தேயக் காலநிலை மற்றும் பண்பாட்டு மோதல்கள் ஆகியவற்றால் விளைந்த "அந்நியமாதல்" கோட்பாடே இக்கவிதைகளின் முதன்மையான இயக்க ஆற்றலாக விளங்குவதை ஆய்வு சான்றுகள் காட்டுகின்றன.

சேரன், வ.ஐ.ச. ஜெயபாலன், சு. வில்வரத்தினம், சோலைக்கிளி, திருமாவளவன், இளவாலை விஜயேந்திரனின் கவிதைகளும், "சொல்லாத சேதிகள் தொகுப்பில் வெளிப்பட்ட பெண் கவிஞர்களின் குரல்களும் புகலிட வாழ்வின் இருத்தலியல் நெருக்கடிகளை கவிதை வரிகள் வழியே நிறுவியுள்ளன. இக்கவிதைகளில் வெளிப்படும் அந்நியமாதல் உணர்வு என்பது வெறும் தனிமனிதப் புலம்பலாகச் சுருங்கிவிடாமல், ஒடுக்கப்பட்ட ஒரு சமூகத்தின் வரலாற்று ஆவணமாகவும், உலகளாவிய அகதித்துவப் பொதுமையின் சாட்சியமாகவும் உயர்ந்து நிற்கிறது.

உசாத்துணை

அஸ்வகோஸ். (1990). போர்க்காலக் கவிதைகள். யாழ்ப்பாணம் : கவிதைப் பதிப்பகம்.

இளவாலை விஜயேந்திரனின், (1998), கிறான் மரமும் கிளுவை வேலியும். லண்டன் : புகலிட வெளியீடு

சுப்பிரமணியன், நா. (1992). ஈழத்துத் தமிழ் இலக்கியச் செல்நெறி. யாழ்ப்பாணம் : பூபாலசிங்கம் பதிப்பகம்

செங்கொடி, இரா (2012). “அந்நியமாதல்” - புலம்பெயர் தமிழர்களின் கவிதைகளில் காணப்படும் உளவியல் சிக்கல் கீற்று இதழ்.

சேரன். (1983). இரண்டாவது சூரிய உதயம். யாழ்ப்பாணம் : வயல் பதிப்பகம்.

சோலைக்கிளி. (1993). இனி அவளுக்கு எழுதப்போவது. மட்டக்களப்பு : கிழக்கு வெளியீடு.

திருமாவளவன். (2002). பனிவயல் உழவு. மிசிசாகா ∴ சென்னை : காலச்சுவடு பதிப்பகம்.

வில்வரத்தினம், சு. (1995). காற்றுவழிக் கிராமம். சென்னை: மித்ர ஆர்ட்கிரியே'ன்ஸ்.

ஜெயபாலன், வ. ஐ. ச. (1986). ஈழத்து மண்ணும் எங்கள் முகங்களும். சென்னை : அன்னம் வெளியீடு.

Ebeling, S. (2021). From Diasporic Tamil Literature to Global Tamil Literature. In D. Ganguly (Ed.). The Cambridge History of World Literature (pp. 1-20). Cambridge University Press.

Kailasam, V. (1015). Notes on a Postcolonial Sr Lankan Tamil Diasporic Aesthetic : Reading Cheran Rudhramoorthy's Poetry. Fusicolonial Text. 10(3 & 4), 1-18.